செய்தி வெளியீடு எண்: 158 நாள்: 11.03.2013

## மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குரிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு 2012–13ஆம் ஆண்டுக்கு ரூ.1272.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை மாணவ/ மாணவியர் கல்வி உதவித் தொகை, வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு விலையில்லா வீட்டுமனை வழங்குதல், இணைப்புச்சாலை அமைத்தல், மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்தல், கல்வி மேம்பாடு மற்றும் விடுதி நிர்வாகம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படித் திட்டங்களை உரிய காலத்தில் முடித்து அதன் பயன்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை சென்றடையும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆணைப்படி 11.03.2013 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு என். சுப்ரமணியன் அவர்கள் தலைமையில் எழிலகம், வருவாய் நிர்வாகத்துறை கூட்ட அரங்கில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

மேற்படிஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசு செயலர் திருமதி கண்ணகி பாக்கியநாதன் இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஆ.சுகந்தி இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு கே.வி. கிரிதர், இ.வ.ப., மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மற்றும் இதர உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர். இவ்வாய்வுக் கூட்டத்தின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளி/ விடுதிகள்–கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு பற்றியும் ஆதிதிராவிடர்கள் சமுதாயக்கூடம் கட்டுவது பற்றியும், விடுதிகளுக்கான நில எடுப்புக்குறித்தும், மாணவ / மாணவியர்களுக்கான கல்வி உதவித் தொகையை தாமதமின்றி ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட வேண்டும் என்றும், இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல குடியிருப்புகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்குதல், இணைப்புச்சாலை, மயானம் மற்றும் மயானப்பாதை மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதில் முனைப்புடன் திட்டங்களை விரைந்து செயல்படுத்தும்படி அறிவுறுத்தினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் நல்வாழ்வினை கருத்தில் கொண்டு அயராது உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வகையில் அனைத்து திட்டப்பணிகளையும் முனைப்புடன் விரைந்து செயல்படுத்தும்படி அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களை அறிவுறுத்தினார்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**